www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 3:00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண் - 15)

15×1=15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ............
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

2) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

3) வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ............
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

4) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ...........
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

5) 'அல்லில் அயினும் விருந்து வரின் ஊக்கும்' என்று குறிப்பிடும் நூல் ...........
அ) நற்றிணை ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) சிலப்பதிகாரம்

6) இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..........
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

7) ........... 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூலுக்காக 1966-ஆம் ஆண்டு 'சாகித்திய அகாதெமி விருது' பெற்றார்.
அ) கு.ப.ராஜகோபாலன் ஆ) மா.பொ.சிவஞானம்
இ) கி.ராஜநாராயணன் ஈ) கா.ப.செய்குதம்பிபாவலர்

8) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ............
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

9) '<u>பெரிய மீசை சிரித்தார்</u>' - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை ..........
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

10) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ............
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

11) 'சூழி' - என்னும் அணிகலன் அணியும் இடம் ............
அ) காலில் ஆ) காதில் இ) இடையில் ஈ) தலையில்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ.

12) இப்பாடலின் ஆசிரியர் .............
அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர்
இ) குமரகுருபரர் ஈ) பரஞ்சோதிமுனிவர்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

13) பாடலில் இடம்பெறும் அடி எதுகை .........
அ) நெடுந்திரை, நெடும்படை ஆ) ஆழ, யறு
இ) தோழமை, ஏழ்மை ஈ) சொல்லிய, சொல்லொரு

14) 'நெடும்படை' - என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு ..........
அ) உவமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

15) 'வேழம்' - என்ற சொல்லின் பொருள் ..........
அ) யானை ஆ) குதிரை இ) தேர் ஈ)காளை

## பகுதி - II (மதிப்பெண் - 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4×2=8**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

17) **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க**
அ) தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம்
ஆ) விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக் கூடாது என்று எண்ணியவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

18) **உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'**
**காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'**
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

19) செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20) குறிப்பு வரைக. - அவையம்

21) 'விடும்' - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**
அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவன் என் நண்பர்

23) **கலைச்சொல் அறிக.**
அ) Folk literature - ஆ) Cabinet -

24) அமர்ந்தான் - **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

25) **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**
அ) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்
ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

26) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க

27) **இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடரை அமைக்க**
அ) மலை - மாலை ஆ) விதி - வீதி

28) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

## பகுதி - III (மதிப்பெண் - 18)

### பிரிவு- 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) தெருக்கூத்து பற்றி சுருக்கமாக எழுதுக.

30) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான்,

www.Padasalai.Net

முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் .......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ........... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு முன்பின்அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ) விருந்தினர் என்போர் யாவர்?

ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?

இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பிரிவு - 2

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2×3=6**
**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

32) 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

33) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34) **அடிபிறழாமல் எழுதுக.**

அ) 'வாளால் ..... ' எனத் தொடங்கும் 'பெருமாள் திருமொழி பாடல்.

ஆ) 'தூசும் துகிரும் ...' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36) 'தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்'
- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

37) 'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV (மதிப்பெண்கள் - 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) 'மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) வள்ளுவம், சிறந்த அமைசருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

39) அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) மேல்நிலை வகுப்பில் சேர முரளிதரன் என்ற மாணவன் விண்ணப்பிக்கிறார். அவர் பத்தாம் வகுப்பில் பொதுத் தேர்வில் தமிழ் 97, ஆங்கிலம் 90, கணிதம் 95, அறிவியல் 92, சமூக அறிவியல் 96 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார். மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டு படிவத்தை நிரப்புக. தேர்வர் தன்னை முரளிதரன் என்ற மாணவனாகக் கருதிக்கொள்ளவும்.

42) அ) நாம் பின்பற்ற வேண்டிய அறங்கள் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்கவும்:**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - V (மதிப்பெண்கள் - 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உங்களைக் கவர்ந்த நான்கு அறங்களைக் குறிப்பிட்டு அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக

**(அல்லது)**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு தருக.**

அ) முன்னுரை - பிறப்பு - கல்வி - விண்வெளிப் பயணம் - கொலம்பியா விண்கல நிகழ்வு - விருதுகளும் அங்கீகாரங்களும் - முடிவுரை

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

(முன்னுரை - புத்தகக் கண்காட்சி அமைவிடம் - பலவித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை)

- - - - - - --

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com